# <u>பத்திரிக்கை செய்தி குறிப்பு</u>

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்திலிருந்து உதவிப் பொறியாளர் பணிக்காலியிடம் பெறப்பட்டுள்ளது. காலியிட விவரம் பின்வருமாறு -

**<u>கல்வித்தகுதி - BE/B.Tech.</u>**

| | | |
|---|---|---|
| எலக்ட்ரிகல் என்ஜீனியரிங் (EEE) | - | 182 |
| மெக்கானிக்கல் என்ஜீனியரிங் (MECH) | - | 50 |
| சிவில் என்ஜீனியரிங் (CIVIL) | - | 25 |
| எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் என்ஜீனியரிங் (ECE) | - | 10 |
| கணினி அறிவியல் / தகவல் தொழில் நுட்பம் என்ஜீனியரிங் (IT/CS) | - | 4 |
| எலக்டரானிக்ஸ் இன்ஸ்ட்ருமென்டேஷன் என்ஜீனியரிங் (EI) | - | 4 |

**<u>வயது வரம்பு</u>** –

* முற்பட்ட வகுப்பினர் 1-7-2013 அன்று 30 வயதுக்குள் இருக்க வேண்டும்.

* தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடியினர் / தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் முஸ்லீம் / இதர பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.

மேற்குறிப்பிட்டுள்ள காலியிடங்களுக்கு மாநில அளவிலான பதிவு மூப்புடன் மனுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். பதிவுமூப்பு விவரம் www.chennai.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரை பதிவு மூப்புக்குள் பதிவு செய்துள்ள, தகுதியுள்ள மனுதாரர்களது விவரம், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் கிண்டி, சென்னை-32 மற்றும் மதுரை கிளை அலுவலக தகவல் பலகைகளில் ஓட்டப்பட்டுள்ளன. அதனிலிருந்து தகுதியுள்ள பதிவுதாரர்கள் தங்களது பரிந்துரை விவரங்களை அறிந்து கொள்ளலாம். இதில் விடுபாடுகள் ஏதேனும் இருப்பின் 04.10.2013-க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் முறையீடு செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலக துணை இயக்குநர் சென்னை அவர்கள் தெரிவித்துள்ளார்.

த.விஜயகுமார்
துணை இயக்குநர்
தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு
அலுவலகம், கிண்டி, சென்னை-32.